# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### செயன்முறைத் தொழில்நுட்பத்திறன்கள்

சுட்டெண் .................................................. தரம்: 09 நேரம் - 2.00 மணித்தியாலம்

## பகுதி I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) முளை கட்டிய வித்துக்களை எத்தனை நாட்களில் உணவாகக் கொள்ளலாம்?
1) 3 - 5   2) 1 - 3   3) 0 - 1   4) 1 - 2

2) உணவு பல்வகைமைப்படுத்தல் என்பது?
1) உணவைப் பாதுகாத்தல்
2) உணவைப் பழுதடையச் செய்தல்
3) உணவை பல்வேறு விதங்களில் நுகர்வோருக்கு முன்வைத்தல்
4) உணவை விற்பனை செய்தல்

3) பால் உற்பத்தி கொண்ட தொகுதி?
1) யோக்கட், தயிர், ஐஸ்கிறீம்   2) நூடில்ஸ், பூந்தி
3) சலாது, சட்னி   4) புடிங், சப்பாத்தி

4) பசுப்பாலின் இழையமைப்பு
1) திண்மம்   2) திரவம்   3) அரைத்திண்மம்   4) கட்டி

5) யோகட்டின் நிறம்?
1) வெள்ளை   2) மஞ்சள்   3) இளமஞ்சள்   4) சிவப்பு

6) உணவை சிறு துண்டுகளாக்கும் போது இழக்கப்படக்கூடிய போசனைக் கூறுகளாவன?
1) வெளிவிடப்படும் நீர்த்தன்மையும், விற்றமின்கள், ஒட்சியேற்ற நீரோதிகள்
2) காபன், ஐதரசன், ஒட்சிசன்
3) பொட்டாசியம், மக்னீசியம்
4) கந்தகம், நைதரசன்

7) உணவினை அதிக வெப்பமாக்கும் போது சீனியில் ஏற்படும் மாற்றம்?
1) விற்றமின்கள் அழிவடைதல்2)   கரமலாக்கத்திற்கு உட்படல்
3) ஒட்சியேற்றம் நடைபெறும்   4) கரைதல்

8) வெவ்வேறு வகையான சுவையை உணரும் மனித உறுப்பு?
1) கண்   2) மூக்கு   3) வாய்   4) நாக்கு

9) இலங்கைத் தரநிர்ணயசபை பயன்படுத்தும் குறியீடு?
1) **HND**   2) **HNB**   3) **SLS, ISO**   4) **HND, NDA**

10) உணவைப் பல்வகைப்படுத்தும் செயற்றிட்டத்தின் மூலம் அதிகமாகப் பயன்படும் உணவுப் பொருள்?

1) அரிசி 2) மா 3) அவல் 4) சோறு

11) பாலில் உள்ள போசனையை எவ்வுணவு மூலம் பெற்றுக் கொள்ளலாம்?

1) பழங்கள் 2) முட்டை 3) யோகட் 4) இடியப்பம்

12) செயற்றிட்டத்தினை ஆரம்பிக்கும் முன்னர் எதனை தயாரிப்பதனால் உரியவகையில் நடைமுறைப்புடுத்த முடியும்?

1) செயற்பாட்டுத்திட்டம் 2) வேலைத் தேவைகள்
3) செலவுத்திட்டம் 4) வரவு செலவுத் திட்டம்

13) பனை, மா, மீன், சின்ன வெங்காயம், மிளகாய், வாழை, நெல்லி, புளி போன்ற உணவுகள் அதிகமாகக் காணப்படும் மாகாணம்?

1) கிழக்கு 2) மேற்கு 3) வடக்கு 4) தெற்கு

14) பொன்னாங்காணி கீரைத்தண்டினை பயிரிட எத்தனை பகுதிகளாக பிரித்து பயன்படுத்துவர்?

1) 3 2) 2 3) 4 4) 5

15) வரையறுக்கப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான பயிர்ச்செய்கை முறைகளில் ஒன்று?

1) பயிர்ச்செய்கை இறாக்கை 2) நாற்றுமேடை
3) பாத்திகளில் பயிரிடல் 4) பரவி விதைத்தல்

16) **PVC** குழாய் பயன்படுத்தி செய்யப்படும் பயிர்ச்செய்கை?

1) பயிர்ச்செய்கை குடை 2) பயிர்ச்செய்கை கோபுரம்
3) கூம்பகம் 4) மேடை

17) சூழலுக்கு உவப்பானது எனக் காட்டும் குறியீடு?

1)  2)  3)  4) 

18) படத்தில் காட்டப்பட்ட உரு?



1) மின் விளக்கு
2) இழை மின்குமிழ்
3) **LED**
4) **CFL**

19) பிரச்சினைகளை இனங்காணும் போது கவனத்தில் கொள்ள வேண்டியது?

1) பிரச்சனைகளை 2) கவனமாகக் கையாளல்
3) அறிவு, திறன்கள் 4) தொழில் நுட்பங்கள்

20) பாடசாலை வளவில் இடங்களை துல்லியமாக கண்டறிய போடப்படுவது?

1) விளம்பரப் பலகை 2) படிக்கட்டுக்கள்
3) திசைகாட்டி 4) பாதைக் குறிகாட்டி, பெயர்பலகை

( 20× 2 = 40 புள்ளிகள் )

## பகுதி II

- **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) (i) விவசாய உற்பத்திகளை மற்றும் சேவைகள வழங்கக்கூடியவாறு வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக?

(ii) முளை கட்டிய வித்துக்களைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள் எவை?

(iii) மேற்கூறப்பட்டவற்றைக் கொண்டு செய்முறைப் படிமுறையைத் தருக?

( 4 + 4 + 4 = 12 புள்ளிகள் )

02) (i) கோக்கிடாமாப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பொருட்கள் எவை?

(ii) வரையறுக்கப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான பயிர்ச்செய்கை முறைகள் 4 குறிப்பிடுக?

(iii) சதுரமுடியொட்டை மேற்கொள்ளத் தேவையான பொருட்கள், உபகரணங்களைத் தருக?

( 4 + 4 + 4 = 12 புள்ளிகள் )

03) (i) உணவின் தரம் மற்றும் விவரக்கூறுகளின் முக்கியத்துவம் 4 தருக?

(ii) இலங்கையில் சிபார்சு செய்யப்படுகின்ற தரங்களின் உரிமையான 2 நிறுவனங்களும் அவற்றின் குறியீடுகளையும் குறிப்பிடுக?

(iii) சுவர் ஒட்டியொன்றைத் தயாரித்து அதில் ஒரு குறியீட்டினைப் பயன்படுத்திக் காட்டுக?

( 4 + 4 + 4 = 12 புள்ளிகள் )

04) (i) பால் உற்பத்திப் பொருட்கள் 5 தருக?

(ii) செயற்திட்டம் ஒன்றை உணவை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடுக?

(iii) சுட்டித் துண்டு ஒன்றை உற்பத்திப் பொருளுக்கு தயாரித்துக் காட்டுக?

( 4 + 4 + 4 = 12 புள்ளிகள் )

05) (i) வேலையை இலகுவாக்க பயன்படும் செயற்பாடுகளை உதாரணம் மூலம் விளக்குக?

(ii) வேலையை விரைவாக செய்து முடிக்க பயன்படும் உபகரணங்களை வரிசைப்படுத்துக?

(iii) உபகரணத்தின் வினைத்திறனை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் செயற்பாடு யாது?

( 4 + 4 + 4 = 12 புள்ளிகள் )

06) (i) சிற்றளவு வணிகத்தின் பொதுவான பண்புகள் 4 தருக?

(ii) முயற்சியாளர்கள் சிற்றளவு வணிகங்கள் மீது கவனஞ் செலுத்துவதற்கான காரணங்கள் 4 தருக?

(iii) சிற்றளவு வணிகங்கள் வளர்ச்சியடைவதால் நாட்டின் பொருளாதார விருத்திக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் 4 தருக?

( 4 + 4 + 4 = 12 புள்ளிகள் )